தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
முன்னிலை: திரு.அ.மதியழகன்,பி.எஸ்சி(விவ)எம்பிஏ

செமு.ஆ.எண்.அ2/9861/05. நாள்:15.6.2018

| | | |
|---|---|---|
| பொருள்: | | பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப் பணி –கிடங்கு மேலாளர் (தரம்.3) திரு.கோ.விஜயகுமார், பணியினை 9.4.2001 முப முதல் வரன்முறை செய்து ஆணையிடல்-தொடர்பாக. |
| பார்வை: | 1. | தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணை எண்.அ2/4261/01 நாள்.2.4.01 |
| | 2 | சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.அநி3/181532/2005 நாள்.18.7.2017 |
| | 3 | அரசு ஆணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1)துறை நாள்.2.3.2016. |

ஆணை:-

தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் ஈப்பு ஓட்டுநராக பணிபுரிந்த திரு.ஆர்.கோபாலகிருஷ்ணன் என்பவர் பணியில் இருக்கும் போது 18.6.2000 அன்று மரமணடைந்து விட்டார் என்றும் அக்குடும்பத்தின் வறிய நிலையை கண்டும் அன்னாரின் குடும்பத்தினை காப்பாற்றும் பொருட்டும் அன்னாரின் மகன் திரு.கோ.விஜயகுமார் அரசுப் பணியில் சேர கல்வி மற்றும் வயது போன்ற தகுதிகள் பெற்றிருந்ததால் அவர் கிடங்கு மேலாளர் (தரம்.3) பதவியில் கருணை அடிப்படை பணி நியமனம் செய்யப்பட்டு 9.4.2001 முப முதல் ஒரத்தநாடு வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் பாதரங்கோட்டை வேளாண்மை விரிவாக்க மைய கிடங்கு மேலாளர் (தரம்.3) ஆக பணியமர்த்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பார்வை.3-ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் நெறிமுறைகளின்படி அன்னார் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாளான 9.4.2001 முப முதல் இவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

திரு.கோ.விஜயகுமார்,எஸ்.எஸ்.எல்.சி.தேர்ச்சி அடைந்துள்ளார். இவர் 9.4.2001 முப அன்று பணியில் சேர்ந்துள்ளார். அவர் பிறந்த தேதி 27.5.1978 ஆகும். பணி நியமன நாளில் தனியரின் வயது 23 ஆகும். கருணை அடிப்படை நியமனம் கோரி விண்ணப்பம் அளித்த நாளில் 1.3.2001 வயது 22 ஆகும்.

கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.கோ.விஜயகுமார் என்பவரை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வேளாண்மைத்துறையில் 9.4.2001 முப முதல் கிடங்கு மேலாளர் (தரம்.3) பதவியில் வரன்முறை செய்வதற்கும் அப்பதவிக்குரிய உடல் தகுதியை அவர் பெற்றிருக்க வேண்டும் என நிபந்தனைக்குட்பட்டு ஆணையிடப்படுகிறது.

திரு.கோ.விஜயகுமார் என்பவரின் பணி 9.4.2001 முப முதல் கிடங்கு மேலாளர் (குரம் 3) பதவியில் வரன்முறை செய்யப்படுவதால் அவர் வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் சம்பள நிலுவைத் தொகை மீதமிருப்பின் விதிகளின்படி பணியாற்றிய நாள் வரை அவர் பெறத்தகுதியுடையவராவார்.

இப்பணியாளரது பணியினை வரன்முறை செய்யப்படுவதால் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளில் ஈராண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது. தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை முடிக்க வேண்டும். தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிட்டபின் இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வு பெறத்தகுதியுடையவர் ஆவார்.

ஒம்.அ.மதியழகன்
வேளாண்மை இணை இயக்குநர்,
தஞ்சாவூர்.

பெறுநர்:
திரு.கோ.விஜயகுமார்,
கிடங்கு மேலாளர்(குரம்.3)
வேளாண்மை விரிவாக்க மையம்,திருக்கருகாவூர்.
வழி மற்றும் நகல்- வேளாண்மை உதவி இயக்குநர், அம்மாபேட்டை.
நகல்-வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்-இ2-இருப்புக்கோப்பு/பணிப்பதிவேடு.

//ஆணைப்படி//

கண்காணிப்பாளர். 13/6/16

13/6/16